*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*09.08.2025 7.15*
*சனிக்கிழமை □ாலை*

**தலைப்புச் செய்திகள்**

1. **கல்வி நிலையங்களில் மாணவர்களின் தற்கொலையைத் தடுக்க மத்திய அரசு தனித்துவமான வலைதளத்தை தொடங்கியுள்ளது.**

2. **சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷாபந்தன் பண்டிகை இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு குடியரசுத்தலைவர் வாழத்துகளை தெரிவித்துள்ளார்.**

3. **பிரதமரின் மன் கி பாத் நிகழ்ச்சியின் மூலம் ஆகாஷ்வாணிக்கு *34* கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.**

4. **பாலஸ்தீனத்தை தனி நாடாக அமெரிக்கா அங்கீகரிக்காது என்று அந்நாட்டின் துணை அதிபர் திரு. *JD Vance* தெரிவித்துள்ளார்.**

5. **துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி *2-1* என்ற கோல் கணக்கில் ஷில்லாங் அணியை வென்றது.**

**--- இனி விரிவான செய்திகள் ---**

< < < < > > > >

**கல்வி நிலையங்களில் மாணவர்களின் தற்கொலையைத் தடுக்க மத்திய அரசு தனித்துவமான வலைதளத்தை தொடங்கியுள்ளது.**

**இந்த வலைதளத்தில் மாணவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தும் வகையில் பல்வேறு கேள்வி பதில்கள் இடம்பெற்றுள்ளன.**

**கல்வி நிலைய வளாகத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கான யோசனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.**

**முன்னாள் நீதிபதி ரவீந்திர பட் தலைமையிலான முனைப்புக் குழு உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் தற்கொலையை தடுப்பதற்கும், அவர்களின் ஒட்டுமொத்த ஆற்றலை மேம்படுத்தும் வகையில் விரிவான பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது.**

**மாநில அரசுகளும் இந்த இணையதளத்திற்கு உரிய பங்களிப்பை அளித்து மாணவர்களின் நலனை பாதுகாக்க முன்வர வேண்டும் என்று அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.**

< < < < > > > >

*பிரதமரின் மன் கி பாத் நிகழ்ச்சியின் மூலம் ஆகாஷ்வாணிக்கு 34 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*மாநிலங்களைவையில் நேற்று இதுதொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு அமைச்சர் அளித்துள்ள பதிலில் வழக்காமான மற்றும் டிஜிட்டல் தளங்கள் மூலம் இந்த நிகழ்ச்சி மக்களை சென்றடைந்துள்ளது என்று கூறினார்.*

*இந்த நிகழ்ச்சிக்காக தனியாக கூடுதல் செலவு மேற்கொள்ளாமல் ஏற்கனவே உள்ள வசதிகளை பயன்படுத்தி அகில இந்திய வானொலியால் மன் கி பாத் நிகழ்ச்சி தயாரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இந்த நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை 34 கோடியே 13 லட்சம் ரூபாய் வருவாயாக கிடைத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.*

< < < < > > > >

*கடந்த பிப்ரவரி மாதம் மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த புதிய வருமான வரி மசோதா திரும்பப் பெறப்பட்டுள்ளது.*

*நாடாளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இந்த தகவலை தெரிவித்தார்.*

*இந்த மசோதாவை திரும்பப் பெற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பைஜெயந்த் பாண்டா தலைமையிலான தேர்வுக் குழு பல்வேறு பரிந்துரைகளை அளித்திருந்த நிலையில் திருத்தப்பட்ட வருமான வரி மசோதாவை மத்திய அரசு தயார் செய்துள்ளது.*

*இந்தப் புதிய மசோதா நாளை மறுநாள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது.*

< < < < > > > >

*சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷாபந்தன் பண்டிகை இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.*

*இதை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு குடியரசுத்தலைவர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.*

ரக்ஷா பந்தன் பண்டிகை சகோதர சகோதரிகளுக்கு இடையே நல்லிணக்கம், மற்றும் சமூகத்தில் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவதாக கூறியுள்ளார்.

இந்தியாவின் பாரம்பா ிய கலாச்சாரத்தைப் பாதுகாக்க நமக்கு கிடைத்துள்ள வாய்ப்பாக இத்தகைய பண்டிகைகள் அமைந்துள்ளதாகவும், இதுபோன்ற பண்டிகைகளை தொடர்ந்து கொண்டாடி மகளிர் உரிமை மற்றும் கண்ணியத்தை அனைவரும் மதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து பெண்களும் வளமான வாழ்க்கையை வாழவும், அவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தவும் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்றும் குடியரசுத்தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

< < < < > > > >

தமிழகத்தில் கைவினைக் கலைஞர்களுக்கு தொடர்ந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக மாநில சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் காந்தி சிற்பக் கண்காட்சியை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், மாநில அரசின் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டு 156 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் தயாரிக்கப்படும் பஞ்சலோக சிலைகள், மாமல்லபுரம் கற்சிற்பங்கள், நாச்சியார்கோவில் பித்தளை விளக்குகள், தஞ்சாவூர் ஓவியங்கள் உள்ளிட்ட கைவினைப் பொருட்களுக்கு சர்வதேச அளவில் நல்ல வரவேற்பு இருப்பதாகத் தெரிவித்தார்.

கைவினைக் கலைஞர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்த 700 பேருக்கு நடப்பாண்டு 70 லட்சம் ரூபாய் மதிப்பில் நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

< < < < > > > >

ஜார்கண்ட் மாநிலம் Chandauli - Garhwa இடையே சுமார் நான்கரை கிலோ மீட்டர் நீளமுள்ள சரக்கு ரயில் சோதனை ஓட்டம் நேற்று வெற்றிகரமாக நடைபெற்றது.

209 கிலோ மீட்டர் நீளத்தை இந்த ரயில் 5 மணி 10 நிமிடத்தில் கடந்ததாகவும் மணிக்கு 40 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

*பண்டித் தீன்தயாள் உபாத்யாயா ரயில்வே மண்டலத்தில் இருந்து தன்பாத் ரயில்வே மண்டலத்திற்கு சரக்குகளை விரைவாக இந்த ரயில் எடுத்துச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்த ரயில் சோதனை ஓட்ட காணொலியை ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தனது வலைதளத்தில் வெளியிட்டு ரயில்வே ஊழியர்கள் அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.*

<<<<>>>>

*தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு தொடர்ந்து மோசமடைந்து வருவதாகவும், கடந்த 6 மாதத்தில் 6 காவலர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*விருதுநகரில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலத்தில் கொலை, கொள்ளை, திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக குறை கூறினார்.*

*குற்றவாளிகள் மீது காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தால் குற்றங்கள் குறைந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*பொதுமக்கள் ஏற்கனவே அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் அவதிப்படும் நிலையில் மின்கட்டண உயர்வு அவர்களை மேலும் பாதிப்புக்கு ஆளாக்கியுள்ளது என்றும் திரு. பழனிசாமி கூறினார்.*

<<<<>>>>

தகவல், கல்வி மற்றும் பொழுதுபோக்குத் துறையில் விரிவான அணுகலை உறுதி செய்வதற்கு பிரசார் பாரதி செயல்பட்டு வருவதாக அதன் தலைமை செயல் அதிகாரி திரு Gaurav Dwivedi தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று வேவ்ஸ் ஓடிடி தளத்தின் இதழ் பிரிவு தொடக்க விழா வில் பங்கேற்று பேசிய அவர், நுழைவுக்கான

தடையை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

ஆண்டுக்கு 999 ரூபாய் அல்லது மாதத்திற்கு 99 ரூபாய் கட்டணம் செலுத்தி பயனாளர்கள் இந்த சேவையை பெற முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் 8 மொழிகளில் 50 தலைப்புகளிலான சேவையை பயனாளர்கள் பெற முடியும் என்று திரு Gaurav Dwivedi குறிப்பிட்டார்.

<<<<>>>>

தக்காளி விலை உயர்வுக்கு உற்பத்திக்குறைவோ அல்லது அடிப்படை தேவைக்கும், வழங்கலுக்குமான ஏற்றத்தாழ்வோ காரணமல்ல என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நுகர்வோர் விவாகரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், வட மற்றும் வடமேற்கு மாநிலங்களில் பெய்துவரும் கனமழை காரணமாக தக்காளியின் விலை கிலோ ஒன்றுக்கு 73 ரூபாயாக அதிகரித்துள்ளது என கூறப்பட்டுள்ளது.

வானிலை தொடர்பான பாதிப்புகள் காரணமாகவே ஜூலை மாத இறுதியில் தக்காளி விலை உயர்ந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது.

எனினும், வரத்து அதிகரிக்கத் தொடங்கியதும் விலை குறையும் என்றும், கடந்த ஒருவார காலமாக தேசிய கூட்டுறவு நுகர்வோர் சம்மேளனத்தின் மூலம் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு குறைந்த விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

***பாலஸ்தீனத்தை தனி நாடாக அமெரிக்கா அங்கீகரிக்காது என்று அந்நாட்டின் துணை அதிபர் திரு. JD Vance தெரிவித்துள்ளார்.***

***இங்கிலாந்தின் கெண்ட் நகரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாக கூறினார்.***

***காசா பகுதியில் இருந்து ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தை முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பம் என்றும் அவர் தெரிவித்தார்.***

<<<<>>>>

***துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஷில்லாங் அணியை வென்றது.***

-------------

***தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய இளையோர் குத்துச்சண்டைப் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியர்கள் 7 பேரும், ஆடவர் பிரிவில் 3 பேரும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.***

***இதனால் இந்தியாவுக்கு தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கம் கிடைப்பது உறுதியாகியுள்ளது.***

மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் நிஷா, 57 கிலோ எடைப்பிரிவில் முஸ்கான், 60 கிலோ பிாிவில் மினி, 75 கிலோ எடைப்பிரிவில் ஆர்த்தி குமாரி, 80 கிலோ பிரிவில் Parchi Tokas, 65 கிலோ எடைப்பிரிவில் Mausam Suhag ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் Rahul Kundu, 90 கிலோ எடைப்பிரிவில் Hemanth Sangwan ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<The End>>>>